**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு 135/2019**

PW 1 – ஜெகபர் சாதிக் த/பெ முகம்மது ஏகைய்யா
நாள் – 19.12.2023.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

06.11.2023-தேதியிட்ட தாவா சொத்திற்கான எனது தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவின் இணையவழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 06.11.2023-தேதியிட்ட தாவா சொத்திற்கான எனது பெயரில் உள்ள பட்டாவின் இணையவழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்திலுள்ள மின் மோட்டார் எனது தகப்பனார் பெயரில் உள்ளது என்பதற்கான பயனாளர் பதிவேட்டின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்திற்கான புலப்படத்தின் இணையவழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்தை காட்டக்கூடிய 5 புகைப்படங்கள் மற்றும் சி.டி, புகைப்படம் எடுத்ததற்கான சான்றுடன் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (புகைப்படங்கள் தாவா சொத்திற்கானது அல்ல என்று ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது). நான் சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான புகாரின் கையிருப்பு நகலுடன் மனு ஏற்பு ரசீதும் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 29.11.2003-தேதியிட்ட மின் இணைப்பு எண் 53 எனது பெயரில் மாற்றம் செய்யப்பட்ட உத்தரவின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (பிரதிவாதி தரப்பில் மின் இணைப்பு எண் தாவா சொத்திற்கானது அல்ல என்று ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபணையின் பேரில் குறியீடு

செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களை ஏற்று தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.